**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 7/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கோபிநாதன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Calling** | : | **கூலி** |
| **Village** | : | **குடைப்பாறைப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **29** |
| | | | **Dated** | : | **17.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2–ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. கோபிநாதன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது, இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது தான். போலீசார் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். **மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 11.04.2011ம் தேதி இரவு 08.00 மணிக்கு எங்கள் ஊர் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சந்தன கருப்ப சாமி கோவிலுக்கு சென்று கொண்டு இருந்த பொழுது, நானும், எனது நண்பர்களான அருண், சூரியா, சுபாஷ் ஆகியோர்கள் ஆடிக்கொண்டு இருந்தோம். அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த அசோக்குமார், அவரது தம்பி சந்திரசேகர், அவரது நண்பர்கள் சீனிவாசன், ராஜீவ் காந்தி ஆகிய நான்கு பேரும், அங்கு வந்து என்னைப் பார்த்து அசோக்குமாரும், அவர் தம்பி சந்திரசேகரும் இந்த தேவிடியா மகன் தாண்டா எங்க அப்பாவைக் குத்தியது, இவன பிடிங்கடா, போட்டுத் தள்ளுங்கடா என்று சொல்லியவுடன், சீனிவாசனும், ராஜீவ் காந்தியும் என்னை பிடித்துக் கொள்ள அசோக்குமார் தன் கையில் வைத்து இருந்த கத்தியால் நீ தாண்டா என் அப்பாவைக் குத்தியவன், இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லியவாறே எனது வயிற்றின் வலது பக்கம் குத்தினார் என்றும், அதனைத் தொடர்ந்து சந்திரசேகர் கையில் வைத்து இருந்த கத்தியால் செத்து தொலைடா என்று சொல்லிக் கொண்டே வலது பக்க தொடையில் குத்தினார் என்றும், அப்போது சத்தம் போடவே அருண், சூரியா, சுபாஷ் தடுக்க வந்தார்கள் என்றும், அவர்களைப் பார்த்து யாராவது பக்கத்தில் வந்தால் உங்களையும் குத்தி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாகவும், பின்னர் போக்கு ஆட்டோவில் என்னை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், அதன் பின்னர் மேல் சிகிச்சைக்காக

108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை, இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், எனது மயக்கம் தெளிந்த பின்னர் 12.04.2018 ம் தேதி காலை 06.00 மணிக்கு மேல் நகர் தெற்கு காவல் ஆய்வாளர் வந்து என்னை விசாரிக்க நடந்த சம்பவத்தை சொல்லி, நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court on 17.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.